**14.06.2023**

**அ.வ.எண். 232/2012**

**பி.சா.1 தனலட்சுமி அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நானும் எனது சகோதரரும் யாருடைய வாரிசு என்று காண்பிப்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனது வழக்கறிஞரிடம் கூறிவிட்டு ஆவணங்கள் இருந்தால் தாக்கல் செய்கிறேன். பி.சா.ஆ.14 ல் எனது தம்பி பரமசிவத்தின் தகப்பனார் பெயர் ராமசாமி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

2. எனது தாயார் மற்றும் தகப்பனார் கிணறு தோண்டும் வேலை செய்வார்கள் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். ராமதாஸ் இறந்து எவ்வளவு காலத்திற்கு பிறகு சின்னக்கா இறந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. இன்றைய தேதியிலிருந்து எவ்வளவு காலத்திற்கு முன்பு சின்னக்கா இறந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சின்னக்காவிற்கு முன்பு ராமதாஸ் இறந்துவிட்டார்.

3. ராமதாஸ் இறந்தபிறகு அவரின் சொத்துக்கள் சின்னக்கா பெயரில் பட்டா மாறியுள்ளதா என்றால் மாறியுள்ளது எந்தெந்த சொத்துக்கள் என்று தெரியாது. யார்

பெயரில் மாறியுள்ளது என்று எனக்கு தெரியாது. சின்னக்கா இறந்து பிறகு தாவா சொத்திற்கான பட்டா எனது பெயரிலோ அல்லது எனது தம்பி பெயரிலோ மாறியுள்ளதா என்றால் மாறியிருக்கலாம் நான் போய் பார்க்கவில்லை. எனவே தாவா சொத்திற்கான பட்டா என் பெயரிலும் எனது தம்பி பரமேஸ்வரன் பெயரிலும் இல்லை என்றால் எனக்கு தெரியாது.

4. நானும் எனது சகோதரரும் தாவா சொத்திற்கு வரி செலுத்தியதில்லை என்றால் சரியல்ல செலுத்தியுள்ளோம். நில வரி ரசீது எதுவும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. தனலட்சுமி, க/பெ. பழனி என்பது நான் தான். நானும் எனது தம்பியும் ஒரே வீட்டில் தான் வசிக்கிறோம். அதன் கதவிலக்க எண் மற்றும் சர்வே எண் எனக்கு தெரியாது. பி.சா.9ல் 27.08.2012 தேதியில் எனது பெயரிலும் சின்னக்கா பெயரிலும் 2 ரசீதுகள் கண்டுள்ளது என்றால் சரிதான்.

5. ராமதாஸ் என்பவருக்கு வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகள் தான் நேரடி வாரிசுகள் என்றால் சரியல்ல. எனவே ராமதாஸக்கு சொந்தமான தாவா சொத்தில் வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்குதான் உரிமை உள்ளது என்று விளம்புகை பரிகாரம் கோர உரிமையுள்ளது என்றால் சரியல்ல. 8ம் மற்றும் 9ம்

பிரதிவாதிகளாகிய எனக்கும் எனது தம்பிக்கும் தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள படி தாவா தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.